# ★ மருத்துவ பீடத்தை மூடக்கூடாது

## மாணவர்கள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை மூட அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளை வன்மையாகக் கண்டித்துள்ள யாழ். பல்கலைக்கழக மாணவரவையும், மருத்துவ பீட ஒன்றியமும் கண்டன அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளன,

அந்த அறிக்கையின் விபரம் [4-ம் பக்கம் பார்க்க]

·01·1992 பகுதி

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 21 இதழ் 326
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 5-1-1992

## மருத்துவ பீட மாணவனுக்கு சுடுழியச் சிறை

[கொழும்பு]

கொழும்பு மருத்துவக் கல்லூரி இரண்டாம் வருட மாணவர் ஒருவருக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பத்து

[4-ம் பக்கம் பார்க்க]

## 3 சமூக விரோதிகள் 2 படையினர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை, ஆரயம்பதி இராணுவ முகாம்களிலிருந்தும், மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்தும் வந்த இராணுவ அணிகள்மீது நேற்று

[4ம் பக்கம் பார்க்க]

# ★ பல வகை நெருக்கடி

# புலிகளுடன் சமரசம் செய்ய ஜனாதிபதி பிரேமா முயலலாம்

## பி. பி. ஸி. கண்ணோட்டம்

[லண்டன்]

சர்வதேச ரீதியிலும், உள்நாட்டிலும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டு வரும் பல நெருக்கடிகள்; மற்றும் அதிக செலவினங்களைத் தவிர்க்கும்முகமாக ஜனாதிபதி பிரேமதாஸா விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் பெருமளவில் அதிகரித்து வருவதாக பி. பி. ஸி. தனது கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

இது குறித்து 'ராவய' பத்திரிகை ஆசிரியர் திரு விக்டர் ஐவன் பி.பி.ஸி.க்கு கூறுகையில்;

இலங்கைக்கு தற்போது மிகப்பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது பின்வரும் வகையில் அமைந்துள்ளது: இலங்கை மீது இந்தியாவின் தலையீடு பெருமளவில் அதிகரித்துள்ளது, பாதுகாப்பு படையினரும் மக்களுக்கு வழங்கும் நிவாரணத்தினதும் செலவு எட்டியுள்ளது. உதவியை வருடம் 2,500 கோடி ரூபாவை (4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஏற்பாடுகள் துரிதம் படைதளபதிகள் யாழ் விஜயம்

(கொழும்பு)

வடபகுதியில் புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் நோக்கில் படையினர் தயாராகி வருவதாகவும், இதையொட்டி இராணுவ தளபதிகள் பலர் இப்பகுதிகளுக்கு செல்வதாகவும்

(4ம் பக்கம் பார்க்க)

## நான்கு புலிகள் இழக்கில் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

கடந்த முதலாம் திகதி மட்டக்களப்பு சந்திவெளித் திடலில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் நவாப், சூரி, மகேஸ் ஆகிய வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

திருகோணமலையில் தவறுதலாக மிதிவெடியில் மிதித்து லெப். சக்தி (கனகசிங்கம், சிறிஸ்கந்தராஜா சேனையூர், மூதூர்) என்ற போராளி வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## எட்மன் சமரக்கொடி காலமானர்

(கொழும்பு)

லங்கா சமசமாஜ கட்சியின் ஆரம்பகால உறுப்பினரான எட்மன் சமரக்கொடி நேற்று காலமானார்.

[4ம் பக்கம் பார்க்க]

## தெ.கிழக்கு ஆசியாவிலிருந்து விடுதலை புலிகளுக்கு ஆயுதம்!

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்தே ஆயுதம் மற்றும் பண உதவிகள் கிடைப்பதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாய் இந்திய பொலிஸ்குழுவினர் தெரிவித்துள்ளனர்;

ராஜீவ் கொலையின் முக்கிய சந்தேகநபரான ஒற்றைக்கண் சிவராசனுக்கு மேற்படி நாடுகளிலிருந்தே ஆயுதம்கிடைத்ததாகவும் இதுபற்றி ஆராய பொலிஸ் குழுவொன்று மலேசியா சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## விமான தாக்குதல் இளம் பெண் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - தண்ணீரூற்று பகுதியில் நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதலில் அனுஷியா (17 வயது) என்ற இளம் பெண் பலியானர். மற்றும் 4 வீடுகள் பலத்த சேதமடைந்

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டமானுக்கு சிங்கள சிறுவர் வாழ்த்து

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்சியை வாழ்த்தி பெருந்தொகையான சிங்கள சிறுவர் சிறுமிகள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளனர்.

இதேவேளை பெருமளவு சிங்கள மக்களும் திரு.தொண்டமானை வாழ்த்தியுள்ளனர்.

## வடக்கில் நிலைமை பாரதூரம் இந்திய தூதர் 'ஜா' கவலை

[கொழும்பு]

வடக்கில் நடைபெறும் யுத்தத்தினால் உணவு, மருந்து மற்றும் அணிமணிகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது; மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்கள், பாரதூரமானவையாக உள்ளதாக இந்திய தூதர் திரு. என். என் ஜா கூறியுள்ளார்.

பத்திரிகையாளர்கள் மத்தி [4-ம் பக்கம் பார்க்க]

## இம் மாத இறுதியில் தொண்டா யாழ். வருவார்?

[கொழும்பு]

விடுதலைப் புலிகளை சந்திக்க தாம் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் செல்லக்கூடுமென அமைச்சர் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: எனது யாழ்ப்பாண விஜயம் ரத்துச்செய்யப்படவில்லை. அது பின்போடப்பட்டுள்ளது; நாடாளுமன்ற தெரிவுக்குழு இம்மாதம் 10ம், 21ம் திகதிகளில் கூடவுள்ளது. இதன் பின்பே நான் யாழ். செல்வேன்;

எமது யோசனைகளை புலிகள்

(4ம் பக்கம் பார்க்க)

## ஓட்டோக்கள் எதுவும் நேற்று ஓடவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நேற்று ஓட்டோக்கள் எதுவும் ஓடாததினால் பொதுமக்களுக்கு பெரிதும் பாதிப்பு ஏற்பட்டது;

'தமது பாதுகாப்புக்கு உறுதிமொழி வழங்கப்படும்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனையாகிறது

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், மொத்தமாக வும் சில்லறையாகவும் பெற் றுக்கொள்ளவும், 1992ற்கான டயறிகள், கலண்டர்கள், பொங்கல் வாழ்த்துக்கள் மற் றும் புத்தகங்களுக்கும் இன்றே நாடுங்கள்: 'சோபிதா', 363, கே. கே. எஸ். வீதி, யாழ்ப் பாணம். (சி-5799)

### அறிவுப் போட்டி

அஷ்டலக்ஷ்மி வாரத்கால் கலண்டரில் பொது அறிவுப் போட்டி பரிசு ரூபா 1000/-. விபரங்களை விற்பனையாள ரிடம் அறிக. (சி 5805

### G.C.E. (O/L) '92

கணிதம்: திரு. ஸ்ரீதரன், விஞ்ஞானம்: திரு. தவமணி தாசன், 42/6, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை, ஆரம்பம்; 6-1-92. (சி 5820)

### வகுப்பு

'A' level பௌதிகவியல். 93 Batch, ஆசிரியர் N. பதும நாதன், சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய். ஆரம்பம்: 05-01-92, ஞாயிறு மாலை 4-00 மணி. (சி 5822)

### தாதிகள் தேவை

பயிற்சி பெற்ற/பயிற்சி பெற விரும்பும் தாதிகள் தேவை. தொடர்புகொள்க: Dr. இ. விக்னேஸ்வரராசா M.B.B.S. (Cey.), சென்றல் வைத்திய சாலை, பண்டத்தரிப்பு. (சி 5818)

### ஆங்கிலப் படிப்பு

English Grammer ஆங்கில வசனநடை Spoken English ஆங்கிலத்தில் பேசும் முறை. மூன்று மாதப் பயிற்சி. கிழமையில் இரண்டு நாட்கள். V. N. Kandasamy, A.I.B., Part I (London), Inter London), 87, புகையிரத நிலைய வீதி, கொக்குவில். (சி 5826)

### இன்று

(வட்டுக்கோட்டை)

சங்கானை பொது நூலக வாசகர் வட்டத்தினரின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று 05ஆம் திகதி 5-1-92 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் நூலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கனக்கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத்தின் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிராந் திய சபையின் ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பழைய பூங்கா வீதியில் உள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கமண்ட பத்தில் பிராந்திய சபைத் தலை வர் திரு. செ. கந்தசாமி தலை மையில் நடைபெறும். [154]

### விநியோகம்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் வடமேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவு மக்களுக்கான புதிய உலர் உணவு அட்டை நாளை 6ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழக்கம்பரையில் உள்ள ஊர் காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சுற்றுலாப் பணி மனையில் வைத்து வழங்கப் படவுள்ளன.

காரைநகர் மத்திய கிராம சேவை அலுவலர் பிரிவு மக் களுக்கான புதிய உலர்உணவு அட்டைகள் தொல்புரம் சமூ நலசேவைநிலையத்தில் வைத்து இம்மாதம் 9 ஆம் திகதி வியா ழக்கிழமை பிற்பகல் வழங் கப்படவுள்ளன. (139)

## நேபாளத்தில் சாவ் விளையாட்டுப் போட்டி

(கொழும்பு)

6வது சாவ் விளையாட்டுப் போட்டி, 1993ம் ஆண்டு நேபாளத்தின் தலைநகரான காத்மாண்டுவில் நடை பெறும். (வி)

## கடும் குளிருக்கு 135 பேர் பலி

[டாக்கா]

வட பங்களாதேஷில் ஏற் பட்ட கடும் குளிரினால் கடந்த ஒரு வாரத்தில் 135 பேர் உயிரிழந்தனர்.

## அறிவித்தல்

யாழ். மத்திய சந்தைப்பகுதியில் இடங்கொண்டிருக் கும் ஞானவைரவர் கோவில் திருவிழாவை முன் னிட்டு எதிர்வரும் 14-01-92 முதல் 06-02-92 வரை யுள்ள காலப்பகுதியில் நேர்படி ஆலயமுன் வீதி ஆஸ்பத்திரி வீதி - சீ. பொன்னம்பலம் வீதி (ராணி படமாளிகை முன்பாகவுள்ள வீதி) வாகனப் போக்கு வரத்திற்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். (ஏ-1833)

## 71வது பிறந்ததின வாழ்த்து

### திரு. வல்லிசேனாதிபதி நிமல் கந்தையா

மானிப்பாய் நவாலியூர் வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் சேனாதிபதி வள்ளியம்மை தம்பதிகளின் புதல்வர் நிமல் கந்தையா தனது 71வது பிறந்த தினத்தை இன்று (05-01-1992) கொண்டாடு கிறார்.

இவரை வாழ்த்துபவர்கள்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்,
நண்பர்கள் மற்றும் அயலவர்கள்.

வல்லிபுரமுதலியார் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய். (சி-5817)

## 'சோபிதா'

பாடசாலை மாணவர்களுக்கான

- ★ அப்பியாசக் கொப்பிகள்
- ★ மொனிட்டஸ் கொப்பிகள்
- ★ C. R. கொப்பிகள்
- ★ பதிவேட்டுக் கொப்பிகள்
- ★ பென்சில்கள் பேனைகள்
- ★ மை வகைகள்
- ★ பேப்பர் வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**சோபிதா** 363, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி 5825)

## புதிய கணக்கியல் வகுப்புக்கள்

A. A. T. -London / -Srilanka } Stage I & Stage II

I. A. B. = Found Inter & Finals

ஆரம்பம்: 6-1 1992

North Ceylon Technical Institute,
14, St. Peter's Lane,
JAFFNA. (A-1819)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் திருமதி சின்னத்தங்கம் சங்கரப்பிள்ளை

தோற்றம்: 16-10-1903 பிரிவு: 07-12-1991

06-01-1992 திங்கட்கிழமை காலை 10-00 மணி முதல் 12-00 மணி வரை அன்னாரின் வீட்டுக்கிரியை கள் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் இக்கிரியைகளில் வந்து கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும், நண்பகல் உண வில் கலந்துகொள்ளும்படியும் உறவினர்களையும், நண் பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவை அறிந்து உடனே வந்து ஆறு தல் அளித்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து வெவ்வேறு வகைகளில் உதவியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (சி-5821)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இராமசாமி வரதராஜசுந்தரம்

(கொட்டடி - யாழ்ப்பாணம்)

மலர்வு: 21-06-1960 உதிர்வு: 18-01-91 திதி 5-01-1992

நீயாண்ட இல்லத்தின் நினைவாண்ட ஒளிவிளக்கே!
ஓராண்டு போயிடுச்சே! ஒளித்தீபம் நீ இணையுண்டே!
மங்கலம் காணாது மண்ணுக்குள் மறைந்தாயே!
பொங்கிடும் அலைகள் போயிடுமா? எமைவிட்டு
ஐந்தாண்டு சவூதியிலே ஆர்வமுடன் பணிசெய்தாய்!
அரையாண்டு இங்கிலாந்தில்! ஆண்டவனேன்
சதிசெய்தான்?
முப்பது வயதினை நீ முடித்துவிட்ட வேளையிலே
ஆபத்து விபத்தாக அப்பனுனை அணுகியதே!
உற்றார் உனக்கென உடன்பிறந்தார் தாம்புலம்ப
பெற்றார் வாழ்ந்திருந்தார் பேதலித்துக் கதறியழ
சற்றேனும் தயைகாட்டாச் சதிகாலன் கொடுமையினால்
அற்றதே உன்வாழ்வு! அமைதியை நாம்
அடைவோமா?

★ 95, ஒருற்றிக்குப் பிளேஸ், கொழும்பு-15இல் "முதலாவது ஆண்டு நினைவஞ்சலி" நிகழ்வு நடைபெறும்.

பிரிவால் துயருறும்;
தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள், நண்பர்கள்.
(சி-5819)

## யாழ். வைத்தியசாலையில் 75 நோயாளிகள் 3 தினங்களில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று தினங்களில் வயிற்றோட்டம், காய்ச்சல், சளி, மூட்டு மற்றும் பல தொற்றுநோய்களால் பீடிக்கப்பட்டநிலையில் 75க்கு மேற்பட்டோர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகள் தொடக்கம் இருவர்கள் வரையில் 40க்கு மேற்பட்டோர் குழந்தைகள் சிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்டனர்.

குறிப்பிட்ட வயிற்றோட்ட நோயினால் இரு குழந்தைகள், ஒருசிறுமி, ஒரு பெண் உட்பட நால்வர் யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானது தெரிந்ததே (56)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமிய உற்பத்திக்குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொள்ளும் மாதாந்தக் கலந்துரையாடல் இன்று ஞாயிறு பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தல் நடைபெறும்.

## செயலாளர் பணிமனைகள்

(மானிப்பாய்)

வேலணை, நெடுந்தீவு பகுதிகளுக்கான பிரிவுச் செயலாளர் பணிமனைகள் யாழ் செயலகத்தில் தற்காலிகமாக செயல்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

வேலணை பிரிவுக்கான அலுவலகம் மாவட்ட விளையாட்டதிகாரியின் பணிமனையிலும் நெடுந்தீவு பகுதிக்கான அலுவலகம் முனைய நலன்புரிச் சங்க கிளையிலும் செயல்படவுள்ளதாக மேலும் தெரிய வந்துள்ளது.

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் சங்கக்கூட்டம் இம்மாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெற உள்ளது.

தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் சமூகம் தருமாறு தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் தே. மாலா கேட்டுள்ளார். (152)

## "உற்பத்தியாகும் நாட்டுக்கு மட்டும் நதி சொந்தமல்ல" — கருணாநிதி

(சென்னை)

ஐரோப்பாவில் டான்யூப் என்று ஒருநதி ஓடுகிறது. அது ஒரு நாட்டில் தொடங்கி பல நாடுகள் வழியாகக் கண்டம் நெடுக ஓடுகின்றது. அந்த நதி எந்த நாட்டில் உற்பத்தியாகிறதோ அந்நாட்டுக்காரன் இது எனது நாட்டில் துவங்குவதால் எனக்கு மட்டும் தான் சொந்தம் என்று முட்டாள்தனமாகப் பேசவில்லை. வரலாற்று நிலவியல் ரீதியாக அந்த நதியைப்பற்றி ஆராய்ந்து அதற்கு ஏற்ப தண்ணீரை முறையாகப் பிரித்துக் கொள்கின்றனர். ஏனென்றால் உலக அளவிலான நதி நீர்ச்சட்டங்கள் அப்படித்தான் உள்ளன.

இவ்வாறு தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி கர்நாடக மாநிலத்தில் அப்பாவித்தமிழர்கள் தாக்கப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து சென்னையில் நடாத்திய பேரணியில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; நான் சொல்லப் போவது எனது விருப்பமில்லை என்றாலும் உதாரணத்துக்காகச் சொல்கின்றேன் ஒரு வேளை தமிழ்நாடு ஒருதனி நாடாக இருந்து கர்நாடகம் இன்னொருதனிநாடாக இருந்தால்கூட தமிழ்நாட்டுக்கு தண்ணீர்தரமுடியாது என்று கர்நாடகம் சொல்லமுடியாது. இதை உடனடியாக மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் இல்லாவிட்டால் தனது அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பதை தமிழகம் விரைவில் அறிவிக்கும் என்றார். (எஸ்)

## ஆண்டு விழா

[உடுவில்]

உடுவில் கற்பொக்கணை கலைமதி சனசமூக நிலையத்தின் 6வது ஆண்டு நிறைவு விழா இன்று 5ம் திகதி பிற்பகல் நிலைய மைதானத்தில் நடைபெறும். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். [109]

## சிரமதானப் பணி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயான அபிவிருத்திச் சங்கத்தினர், இன்று மேற்படி மயானத்தில் சிரமதானப் பணி ஒன்றை மேற்கொள்ள உள்ளனர்.

## பிற்பகல் வாரவிழா

(பருத்தித்துறை)

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகமும், ஞானசம்பந்தர் கலைமன்றமும் இணைந்துநடாத்தும் பிற்பகல் வாரவிழா இன்று 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஞானசம்பந்தர் கலைமன்ற மண்டபத்தில் திரு. க. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (52)

## 14 ஆயிரம் கடவுச்சீட்டு விநியோகம்

(கொழும்பு)

கடந்த நாலு மாத காலத்தில் 13 ஆயிரம் கடவுச் சீட்டுக்களை விநியோகித்ததன் மூலம் ஒருகோடி ரூபாவை சம்பாதித்து கண்டி கடவுச்சீட்டு அலுவலகம் புதிய சாதனை படைத்துள்ளது.

## ஏப்பிரலில் சாகித்திய விழா

(கொழும்பு)

தமிழ் சாகித்திய விழா இவ்வருடம் ஏப்பிரல் மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

1991ல் வெளியான நூல்களுக்கு பரிசுகள் வழங்கப்படவிருப்பதாகவும் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இராசி பலன்

05-01-1992
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு மார்கழி 21)

பிரதமை முழுவதும்; பூராடம் மாலை 6-03 வரை, சித்தாமிர்தம், இராகுகாலம் மாலை 5-06 முதல் 0-31 வரை, சுபநேரம் காலை 9-31 முதல் 11-01 வரை.

மேடம்: களத்திர சந்தோஷம், தைரியமிகுதி பணவரவு

இடபம்: மக்கள் விரோதம், இடம் பிரிவு, அச்சம்.

மிதுனம்; பிதுர் துவேஷம், பிரயாண கவலை, நோய்.

கடகம்: வாழ்க்கைவசதி, மனமகிழ்ச்சி, வருவாய்மிகுதி

சிங்கம்: அதிகாரிகள் சீற்றம், பணவிரயம், வாக்குபகை.

கன்னி; ஆன்மீக சிந்தனை, தொழில் உறவு, மனத்தெளிவு.

துலாம்; காரியஜெயம், தெய்வீகசெலவு, புதிய முதலீடு

விருச்சிகம்; மனைவியால் அனுகூலம், சச்சரவு, வைத்தியச் செலவு.

தனுசு: பெரியவர் உபகாரம், மனப்போராட்டம், குறைகேட்டல்.

மகரம்: வஸ்திர லாபம், தொழில் சிறப்பு, பொதுப் பணி.

கும்பம்: தவறான செயல், மனைவிக்கு துயர், அபர்நேசம்.

மீனம்: சகோதர உதவி, எதிர்பாராதநன்மை, வாக்கு வன்மை.

— ஜோஸ்யர்

## பென்சன் வவுச்சர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் டிசம்பர் மாதப் பென்சன் வவுச்சர்கள் குமணகப்பலில் வந்துள்ளன.

ஜனவரி மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் இம்மாத நடுப்பகுதியில் பருத்தித்துறைக்கு வரும் கப்பலில் வருமென எதிர்பார்க்கப்படுகிறது (மா)

## பரீட்சை

[யாழ்ப்பாணம்]

இமய எழுதுவினைஞர்கள் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி பரீட்சையை நடாத்துவதற்கான ஒழுங்குகளை யாழ். அரசஅதிபர் திரு. க. மாணிக்கவாசகர் மேற்கொண்டு வருகிறார். [மா]

## மட்டக்களப்பில் 1472 ஆசிரிய வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1472 ஆசிரியர்கள் வெற்றிடங்கள் இருந்து வருகின்றன. பழுகாமம், மண்டூர், மகிழவெட்டுவான், வாகரை, கன்னன்குடா ஆகிய பின்தங்கிய பிரதேசங்களில் இவ்வெற்றிடங்கள் நிலவி வருகிறது.

இப்பகுதிகளில் ஆரம்ப ஆசிரியர் 806, ஆங்கில ஆசிரியர் 260, கணித ஆசிரியர் 100, விஞ்ஞான ஆசிரியர் 89, சமூகக் கல்வி ஆசிரியர் 28, ஏனைய ஆசிரியர்கள் 143 என வெற்றிடங்கள் நிலவி வருகிறது. (150)

## 1000 குடும்பங்களுக்கு இணறு அமைக்க புலிகள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வடக்கு மகாத்மா சனசமூக நிலைய பகுதி பின்தங்கிய மக்களுக்கு குடிநீர் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுக்க தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வந்துள்ளனர்.

இப்பகுதிமக்கள் குடிநீர்ப் பிரச்சினையால் நீண்டகாலமாக கஷ்டப்பட்டதை யடுத்து கிணறு அமைக்கும் வேலைகள் ஆரம்பித்துள்ளன.

இதற்கான முழுச் செலவுகளையும் விடுதலைப் புலிகளே ஏற்றுள்ளனர்.

இவர்களது இம்முயற்சியால் இப்பகுதியில் சுமார் 1000 குடும்பங்கள் பயனடையவுள்ளனர். [150]

## சிறுவர் பராமரிப்பு நிலையம்

[பண்டத்தரிப்பு]

தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்ச ஆதீனத்தினால் சில்லாலை சாந்தை கிராமத்தில் நிறுவப்பட்ட "சாந்தசோலை சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம்" அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. [72]

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் நடாத்திவரும் 7 பேர், 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன.

இச்சுற்றுப்போட்டிகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்றுவருகின்றது.

சுமார் 40 கழகங்கள் பங்குபற்றியுள்ள இப்போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் 13ம், 17ம் திகதிகளில் நடைபெற உள்ளது. (சி)

## வவுனியா ரயில் நிலையம் விஸ்தரிப்பு

(வவுனியா)

வவுனியா ரயில் நிலையம் தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ளது புதிதாக வவுனியா ரயில் நிலையத்தில் ஓய்வு விடுதி அறைகள் கட்டப்பட்டுள்ளன.

வவுனியா-கொழும்பு ரயில் சேவையில் மூன்று ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வவுனியாவில் மேலதிக ரயில் மேடை அமைக்க ரயில்வே திணைக்களம் உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## முல்லை. இலங்கை வங்கி ஆவணங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இலங்கை வங்கி ஆவணங்கள் வங்கி உயர் அதிகாரிகளினால் வங்கியிலிருந்து மீட்கப்பட்டு வருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆறு வங்கி உயர் அதிகாரிகள் ராணுவத்தினரின் அனுமதியுடன் ஹெலிகாப்டர் மூலம் முல்லைத்தீவுக்கு வந்து மீட்கும் பணியில் தற்போது ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வங்கி இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த காலம் முதல் செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (150)

## பாலர் கல்வி கூடம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு பிரதேசத்தில் உள்ள சிறார்களின் கல்விவளர்ச்சி கருதி சமூக பொருளாதார வளர்சித் திட்ட பிரிவினரால் பூம்புகார் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நித்திலா பாலர் கல்விக்கூடம் நாளை 6-ம் திகதி ஆரம்பமாக உள்ளது.

ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையான மாணவர்களுக்கு தற்பொழுது இங்கு கல்வி பயில வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## மானியவிலையில் நெசவாளர் குடும்பங்களுக்கு நூல்கள் வழங்க ஏற்பாடு

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள நெசவுத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் நெசவுநூல்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட புடவைக் கைத்தொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் மேற்கொண்டுள்ளார்.

நெசவுத் தொழிலை நம்பியிருந்த குடும்பங்கள் இன்றையநிலையால் பாதிப்படைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே இந்நெசவாளர் குடும்பங்களுக்கு நெசவு நூல்கள் மானியவிலையில் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ். மாவட்ட புடவைக் கைத்தொழில் திணைக்களம் நெசவுத் தொழிலையே நம்பியிருக்கும் நெசவுத் தொழில் குடும்பங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதில் ஈடுபட்டுள்ளது. (52)

## மருத்துவ பீடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:

மருத்துவபீடத்தை வடபகுதிக்கு வெளியே இடமாற்றம் செய்ய முயற்சிக்கும் இச்செயலானது சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இன ஒதுக்கல் நடவடிக்கையாகும். ஆண்டாண்டு காலமாக தமிழ் மக்களின் கல்வியைச் சீர்குலைப்பதற்கு சிறிலங்கா அரசானது முயற்சிசெய்துவருவதை சகலரும் அறிவர். தரப்படுத்தல் மூலம் ஆரம்பித்து நூலக எரிப்புக்கள், பாடசாலை எரிப்புக்கள் போன்றவற்றைச் செய்து வந்த சிறிலங்கா அரசானது இப்போது அவற்றை செய்யமுடியாத நிலையில் குண்டுவீச்சுக்களை மேற்கொண்டுவந்தது. இப்போது அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் பல்கலைக்கழக மருத்துவபீடத்தை மூடிவிடும் எண்ணத்திற்கு வந்துவிட்டது. தமிழ் மக்களின் கல்வி மீது அரசியல் சாயம்பூசி அதை தமது அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்த சிறிலங்கா அரசு முனைந்து நிற்கின்றது.

சிறிலங்கா அரசின் இப்பாதகச்செயலுக்கு எம்மவர்களின் செல்களும் தூண்டுகோலாக அமைவதை நாம் மிகவும் வேதனையோடுநோக்குகின்றோம். மருத்துவபீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் பலர் தமது சுயலாபம் கருதி இங்கிருந்து வெளியேறி வேறிடங்களுக்கு சென்றுள்ளனர். விரிவுரையாளர்களின் பற்றாக்குறையைக் காரணம் காட்டி சில மாணவர்கள் தாம் இங்கு கல்வியைத் தொடர முடியாதெனக் கூறி தமக்கு வேறு இடங்களில் கல்வியைத் தொடர வகைசெய்யுமாறு மானியங்கள் ஆணைக்குழுவை கேட்டுவருகின்றனர். இந்நிலையானது சிறிலங்கா அரசின் தமிழர் கல்வியை அழிக்கும் திட்டத்திற்கு ஆதரவான ஒரு நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. இந்த நிலையைத் நாம் வளரப் போமாயின் எமக்கு நாமே குழிதோண்டியவர்களாவே இருப்போம். எனவே இங்கிருந்து சென்ற விரிவுரையாளர்கள் இங்குவந்து தமது சேவையைத் தமது மண்ணிற்கு வழங்கவேண்டும். இங்குள்ள வசதிக்குறைபாடுகளைக் காரணம் காட்டி மாற்றம் கேட்கும்மாணவர்கள்மற்றைய மாணவர்களின் நலனைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

இன்று சில காரணங்களைக் காட்டி மருத்துவபீடம் ஆபத்தானநிலைக்குச் சென்றுவிட்டது. இதேபோல் நாளை மற்றைய பீடங்களும் இதே ஆபத்தான நிலைக்குச் செல்லமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? இந்த நிலையை நாம் அனுமதிப்போமாயின் பல்கலைக்கழகத்தில் சகல பீடங்களையும் மூடவேண்டிய அபாய நிலைக்கு நாம் தள்ளப்படுவதோடு உயர்தரப் பரீட்சைகளையும் தென் பகுதியிலேயே எழுதும்படி நிர்ப்பந்திக்கப்படலாம்.

ஸ்ரீலங்கா அரசின் இச்செயற்பாடானது பல உள்நோக்கங்களைக் கொண்டுள்ளதாவென நாம் சந்தேகிக்க வேண்டியுள்ளது. வடக்கில் வாழும் 12 லட்சம் மக்களுக்கு ஆதாரமாக விளங்கும் ஒரே யொரு பெரும் வைத்தியசாலையாக யாழ். வைத்தியசாலையே விளங்குகிறது.

எனவே மருத்துவபீடத்தை இடம் மாற்றுவதன் மூலம் யாழ். வைத்தியசாலையானது போதனா வைத்தியசாலை என்ற நிலையிலிருந்து தரம் குறைக்கப்படும். இதனால் வைத்தியசாலைக்கு வழங்கப்படும் வசதிகள் குறைக்கப்படும். இதன் மூலம் மக்களுக்குச் செய்துகொடுக்கப்படும் மருத்துவ வசதிகளைக் குறைப்பதன் மூலம் ஸ்ரீலங்கா அரசானது மேலும் இன அழிப்பை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாவெனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

எனவே மக்களினதும் மாணவர்களினதும் நலனைப் பாதிக்கும் எந்த நடவடிக்கைக்கும் உறுதுணையாக அமையமாட்டோம் எனத் தெளிவுபடுத்துவதோடு இவ்விடமாற்ற நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதோடு அதனை எதிர்க்கிறோம். இச்செயலைக் கண்டிப்பதற்கும் தடுப்பதற்கும் மக்கள், அறிஞர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

## தடுப்பூசி மருந்துகள் யாழ். வந்தன

(யாழ்ப்பாணம்)

குமண கப்பலில் யாழ். போதனா வைத்தியசாலை உட்பட யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு வைத்திய சாலைகளுக்கும் தேவையான ஏற்புத்தடுப்பூசி மருந்தும் விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்தும் வந்து சேர்ந்துள்ளன.

நேற்றிலிருந்து இவ்விரு ஊசி மருந்துகளும் யாழ் போதனா வைத்தியசாலையில் போடப்பட்டுவருகிறது. (56)

## தென்கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் விடுதலைப் புலிகள் பற்றிய மேலதிக தகவல்கள் ஜேர்மனி. பிரிட்டன், பிரான்ஸ், சிங்கப்பூர் மலேசியா போன்ற நாடுகளிடமிருந்தும் விபரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வடக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் அவர் மேலும் கூறுகையில்:

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு கௌரவமான அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் அதற்கு விட்டுக் கொடுத்தல் அவசியம். இப்படி விட்டுக்கொடுத்தல் என்று கூறும்பொழுது விடுதல் மட்டுமல்ல; கொடுத்தலும் தேவை.”

ராஜீவ் காந்தியின் கொலைக்குப்பின்னர் இந்தியா இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மெத்தனமாக இருக்கிறதா என வினவியபோது! செய்யக்கூடிய சிறந்த செயல் பிரச்னை தீர்வுக்கான ஒரு பொது நிலைப்பாட்டைக் காண முயல்வதுதான். போதிய பொது நிலைப்பாடு இப்போது இருப்பதாக எனக்குதோன்றவில்லை.

அரசியல் தீர்வுகாண ஒரு பொது அடிப்படை ஒரு சந்திப்பு மூலம் தேவை. ஆனால் அதற்கான எல்லா அம்சங்களும் இருப்பதாக இதுவரை எனக்கு தெரியவில்லை. புதிய ஆண்டில் எதுவும் தோன்றலாம். எல்லாவற்றுக்கும் மேலாக பிரச்சனைக்கு தீர்வு காண அரசியல் உறுதிப்பாடு தேவை.

வடபகுதியில் வன்முறைகள் ஒருபுறம், மனித உரிமை மீறல்கள் விமானக்குண்டுவீச்சுக்கள் நடப்பதை இந்தியா பார்த்துக் கொண்டிருக்கிறதா என வினவியபோது ‘கடந்த ஆண்டு இதுதொடர்பான அறிக்கையை புதுடில்லி வெளியிட்டது, வடபகுதியில் பொதுமக்கள்படுகொலைக்கு கவலை தெரிவிக்கப்பட்டது. இரண்டு பகுதியும் பேச்சுவார்த்தையில் பங்கெடுத்து அரசியல் ரீதியாக தீர்வுகாண வேண்டுமென வலியுறுத்துவோம்’ என்றார். (எஸ்)

## கடூழியச் சிறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்பதுமாதகால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி எவ். என். டி. ஜெயசூரியா, பரணதுறையைச் சேர்ந்த சந்திரதாசா (21-வயது) என்பவருக்கு இத் தீர்ப்பை வழங்கினர்.

இவ் வாலிபர் அரசைக் கவிழ்க்க ஜே. வி பி. சார்பான கட்டுரைகளை எழுதினர் எனவும் ஜே. வி. பி. கங்கத் தவர் ஒருவர் தொடர்பான தகவலை அறிந்திருந்தும் வெளியிட மறுத்தமைக்காக விசாரணை நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. [எஸ்]

## விமான தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன.

இருவிமானங்கள் காலை 8-30 மணிமுதல் கிளாலித்துறையிலும், தண்ணீரூற்றுப் பகுதியிலும் பலத்த தாக்குதலை நடாத்தியுள்ளன. (சி)

## ஓட்டோக்கள்

(1-ம் பக்கத் தொடர்சசி)

வரை ஓட்டோக்கள் ஏதும் வீதிகளில் ஓடாதென ஓட்டோ சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமத்தில் நேற்று முன்தினம் ஓட்டோ சங்க உறுப்பினர்களை எழிமற்ற கோஷ்டி ஒன்று அவர்களைத் தாக்கியதையடுத்தே இந்த நெருக்கடி எழுந்துள்ளது.

ஓட்டோக்கள் ஏதும் நேற்று ஓடாததால் கொழும்பு பயணிகள் பெரும் கஷ்ட நிலைக்கு தள்ளப்பட்டனர். (56-வி)

## இம்மாத

(1-ம் பக்கத் தொடர்ச்சி

ஒர் அடித்தளமாகக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் இதனை முன்னெடுத்துச் செல்வதில் பலனில்லை

எனது யோசனைகளை யாரும் எதிர்க்கலாம் ஆனால் மாற்று யோசனைகளை முன்வைக்க யாரும் முன்வருகிறார்கள் இல்லையே என்றும் கவலை தெரிவித்தார். (க)

## எட்மன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1956ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில்தெஹிவளை கல்கிசை தொகுதியில் வெற்றி பெற்ற எட்மன் சமரக்கொடி 1965ம் ஆண்டுவரையும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.

## நான்கு புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மூன்று போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தங்கள் வீரவணக்கத்தை தெரிவித்துக்கொண்டனர்.

## இராணுவ ஏற்பாடு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

கடந்த சில தினங்களில் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ யாழ் மாவட்ட தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்ணவும் நேற்று முன்தினம் இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்னவும் யாழ். விஜயத்தை மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

மேலும் வடக்கில் தீவுப் பகுதியைத் தவிர்த்த பகுதியில் விரைவில் தாக்குதல் ஆரம்பமாகுமென நேற்று ஹமில்டன் வனசிங்கா கூறியுள்ளார். (சி)

## பலவகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தப் போவதாக பல நாடுகளும்- பல உதவி வழங்கும் நிறுவனங்களும் எச்சரித்துள்ளன பெப்ரவரி மாதம் பாரிஸில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு, ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கு முடிவையும் நிராவிலுள்ளதாக தீர்ப்பின் சாதக பாதக நிலை மற்றும் சிங்கள மக்களிடை ஒரு சாராரிடையே ஏற்பட்டுவரும் மனமாற்றம் என்பனவற்றால் தற்போது ஜனாதிபதி மிகப்பெரும் நெருக்கடியை சந்திக்க வேண்டியுள்ளது.

இவற்றையெல்லாம் தவிர்த்து நாட்டை பொருளாதார சீரழிவிலும், வறுமையிலும் இருந்து மீட்க புலிகளுடன் சமரசம் செய்யவேண்டிய ஒரு நிலை தோன்றிவருவதாகவும் திரு. விக்டர் ஐவன் தெரிவித்தார். (மா-கி)

## 3 சமூக விரோதிகள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 2 இராணுவமும்3சமூக விரோதிகளும் பலியாயினர்.

ஒன்றரை மணி நேரம் நடந்த கடும் தாக்குதலை யடுத்து இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் தமது இராணுவ முகாம்களுக்கு திரும்பிச் சென்றனர்.

இம்மோதலில் புலிகள் தரப்பில் மேஜர் வினோத் (முருகேசு அசோகன். கொக்கட்டிச் சோலை) வீரமரணமடைந்தார்


# சுவாமி விபுலானந்த இசை - நடனக் கல்லூரி

மட்டக்களப்பு

நான்காண்டு டிப்ளோமா கற்கைநெறிக்கான

## விண்ணப்ப திகதி நீடிப்பு

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை-நடனக் கல்லூரியில் 1992ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை தேர்வு செய்வதற்கான விண்ணப்ப திகதி 1992-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை 29-11-1991 திகதிய வர்த்தமானியில் காண்க. அவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

க. சண்முகலிங்கம்,
பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

(ஏ-1825)



## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி. பீடிகளைப்போல் ஒரு சில நபர்கள் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி, ஜி. பீடிகளை விற்பனை செய்வதாக அறியவந்துள்ளோம். அசல் ஆர். வி. ஜி. பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி பீடிகளை விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இதமான, சுவையான புகை இன்பத்திற்கு அசல் ஆர். வி. ஜி. பீடிகளை கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.

**ஆர். வி ஜி. நிர்வாகம்.**

58, குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-5814)


## மரண அறிவித்தல்

### திருமதி தம்பியப்பா சிவக்கொழுந்து

புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பியப்பாவின் மனைவி சிவக்கொழுந்து சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் துரைச்சாமியின் அன்புத் தாயாரும், கமலத்தின் அன்பு மாமியாரும், தவமணி தேவி, காலஞ்சென்ற புவனேந்திரன், துரைராசலிங்கம், ராணி, தர்மகுலசிங்கம் (கனடா), கிறிஸ்ரா (கொழும்பு), சரோஜினிதேவி, காலஞ்சென்ற பிரபாகரன், சுசிலாதேவி, அமிர்தலிங்கம், தனபாலசிங்கம், கலைச்செல்வி, குணபாலசிங்கம் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (5-1 92) காலை 10 மணிக்கு 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: துரைச்சாமி

(இ-5828)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.